DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | **Special Court for Trial of cases under the Prevention of Corruption Act, Salem.** |
| Calendar | |
| Miscellaneous | |
| Preliminary register | |
| Sessions | Special CC. 1/2017 |
| Deposition of witness for | : P.W.16 |
| Name | : அமுதா |
| Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt.R. Kalpana, Assistant, of this court on the day of 17.03.2020.

**முதல் விசாரணை**

நான் தற்போது சுயவிருப்பத்தின் பேரில் பணி ஓய்வு பெற்று வீட்டில் உள்ளேன். நான் ஏற்கனவே திருச்செங்கோடு பெண்கள் வித்யா விகாஷ் பள்ளியில் 2008 முதல் 2015 வரை தலைமை ஆசிரியராக பணி புரிந்து வந்தேன். என்னிடம் காட்டப்படும் பள்ளி கட்டணங்கள் அடங்கிய கடிதத்தை நான்தான் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அனுப்பிய கடித எண் Rc.256/2012/HD/SL/ 11.02.2013 தேதியிட்ட கடிதத்தின்படி எங்கள் பள்ளியில் 2000 – 2001, 2001 – 2002 வருடத்தில் +1 மற்றும் +2 படித்து சென்ற மாணவி செல்வி.

ப.தேவிப்பிரியா, த/பெ. பன்னீர்செல்வம் என்பவரின் பள்ளிக்கு செலுத்திய கட்டண விவரங்கள் கோரப்பட்டிருந்து. அவர் 05.07.2000 ல் எங்கள் பள்ளியில் சேர்ந்து 25.05.2002 ல் +2 முடித்து வெளியேறியுள்ளார். தேவிப்ரியா +1 மற்றும் +2 வகுப்பிற்கு tuition fees ரூ.19200/-, books fees ரூ.1500/- library, computer, examination and other fees ரூ.1500/- Caution deposit ரூ.5000/- (Refunded), hostel mess fees, +1 ரூ.10,000/- +2 வில் ரூ.10,000/- establishment charge ரூ.4500/- ஆகிய தொகைகளை செலுத்தியுள்ளார். 01.04.2001 முதல் +2 விற்கு மட்டும் கணக்கிடும் போது ரூ.9600/-tuition fees. ரூ,10000/- விடுதி கட்டணமாகவும், establishment charge ரூ.2250/- புத்தகங்களுக்கு ரூ.750/-, கணினி மற்றும் தேர்வுக் கட்டணமாக ரூ.750/- ஆக +2 வகுப்பிற்கு மட்டும் தேவிப்பிரியா மொத்தம் ரூ.23,350/- செலுத்தியுள்ளார். இது சம்மந்தமாக நான் வழங்கிய ஆவணம் அ.சா.ஆ.34 ஆகும். அ.சா.ஆ.34 ல் உள்ளது என் கையெழுத்துதான். இது சம்மந்தமாக சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் என்னை 15.03.2013 ம் தேதி அன்று விசாரித்தார்.

## குறுக்கு விசாரணை

அ.சா.ஆ.34 யார் கணினியில் டைப் செய்தது என்றால் staff டைப் செய்தார். முதல் விசாரணையில் சொல்லிய தொகைகளுக்குண்டான counterfoil எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் வசூலிக்கப்படும் ஒவ்வொரு தொகைக்கும் ரசீது கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். tuition fees, book fees ஆகியவை ஒவ்வொரு வகுப்பிற்கும் admission போடும் போது வாங்குவோம் என்றால் அது சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள கல்வி கட்டணங்கள் அனைத்தும், 2000 ம் வருடத்திலேயே கட்டப்பட்டது என்றால் அது சரியல்ல. ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியாக தொகைகளை வசூலிப்போம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள தொகைகள் உண்மையானது என்றால் அதற்குண்டான அடிக்கட்டைகளை எடுத்து வந்திருப்பேன் என்றால் அது

சரியல்ல. விஜிலன்ஸ் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வழக்கிற்கு ஏற்றார் போல், ஆவணங்களை தயாரித்து கொடுத்துள்ளேன் என்றால் அது சரியல்ல.

Sd/- அமுதா /True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.